06 OCT 2010

சுருக்கம்

திருச்சிராப்பள்ளி மாநகராட்சி – வார்டு எண் 23 – ஆலத்தூர் கிராமம் – 2031 ச.மீ (21,862 சதுர அடி) நிலம் – ரயில்வே துறைக்கு சொந்தமானது பொதுமக்கள் பயன்பாட்டிற்கென 10 ஆண்டுகள் குத்தகைக்கு பெறவும் – உரிமக் கட்டணம் – ரூ.15,14,572/– செலுத்தவும் – நிர்வாக அனுமதி அளித்து – ஆணைகள் – வெளியிடப்படுகின்றன.

---

நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (மாந2) துறை

அரசாணை (நிலை) எண். 234 நாள்: 05.10.2010

படிக்கப்பட்டது:

1. திருச்சிராப்பள்ளி மாநகராட்சி ஆணையர் கடிதம் ந.க.எண்.12397/ எப்.1/2004/ மையம், நாள் 20.6.2007, 13.08.2008
2. நகராட்சி நிர்வாக ஆணையர் கடிதம் ந.க.எண்.64505/மாந.அ.3/07 நாள் 23.11.2007

---

ஆணை:–

மேலே முதலாவதாகப் படிக்கப்பட்ட தனது கடிதத்தில் திருச்சிராப்பள்ளி மாநகராட்சி ஆணையர் திருச்சிராப்பள்ளி மாநகராட்சி, அரியமங்கலம் கோட்டம், வார்டு எண்.29, ஆலத்தூர் கிராமம், சர்வே எண்கள்.206, 207–ல், இரயில்வேக்கு சொந்தமான இடத்தை, மேலஅம்பிகாபுரம் பொது மக்கள், பாதையாக கடந்த பல வருடங்களாக உபயோகப்படுத்தி வருவதாகவும், ரயில்வே நிர்வாகம் அந்த இடத்தில் சுற்றுச்சுவர் எழுப்ப முற்பட்டதால், 20 அடி அகல இடத்தை குடியிருப்போர் நலச்சங்கம், வாடகை அடிப்படையில் வழங்க கோரிக்கை விடுத்ததாகவும், ஆனால், தென்னக ரயில்வே, அந்த இடத்தை தனியாருக்கு வாடகை அடிப்படையில் வழங்க இயலாது எனவும், இக்கோரிக்கை அவசியமெனில், மாநகராட்சி மூலமாக கோரப்பட்டால், மேற்படி 2031 ச.மீ. (21862 சதுர அடி) இடத்தை, ரூ.15,81,472/– குத்தகைக் கட்டண அடிப்படையில் மாநகராட்சிக்கு 35 வருட கால குத்தகைக்கு வழங்குவது குறித்து பரிசீலிக்கலாம் என தெரிவித்துள்ளதாகவும் குறிப்பிட்டுள்ளார்.

2. மேலும், திருச்சிராப்பள்ளி மாநகராட்சி மாமன்றம் நிறைவேற்றிய 02.12.2005–ஆம் நாளிட்ட தீர்மானத்தின் (எண்.251–ன்) அடிப்படையில் மேற்படி நிலத்தினை, மாநில வருவாய்த் துறை நிர்ணயம் செய்யும் தற்கால சந்தை மதிப்பின் அடிப்படையில், மாநகராட்சிக்கு நிலமாற்றம் செய்து தருமாறு தென்னக ரயில்வே கோரப்பட்டதாகவும், ஆனால் தென்னக ரயில்வே, குத்தகை அடிப்படையில் மேற்கண்ட நிலத்திற்கு 10 ஆண்டுகளுக்கு உரிமக் கட்டணமாக ரூ.15,14,572/–ஐ செலுத்துமாறும், அதன் பின் வரும் ஆண்டுகளுக்கு, ஒவ்வொரு ஆண்டிற்கும் நிலத்தின் மதிப்பில் 7% கூடுதல் செய்து உரிமக் கட்டணம் செலுத்துமாறும், தெரிவித்துள்ளதாகவும் குறிப்பிட்டுள்ளார்.

3. இதனடிப்படையில், திருச்சிராப்பள்ளி மாநகராட்சி மன்றம் தனது 25.04.2007–ஆம் நாளிட்ட தீர்மானம் எண்.96–இல் திருச்சிராப்பள்ளி மாநகராட்சிக்குட்பட்ட அரியமங்கலம் கோட்டம், வார்டு எண்.29–இல் சர்வே எண்கள். 206, 207, ஆலத்தூர் கிராமம், ரயில்வே நிர்வாகத்திற்கு சொந்தமான 2031 ச.மீ. (21862 சதுர அடி) இடத்தை, மேலஅம்பிகாபுரம் பொது மக்கள் நலன் கருதி 10 ஆண்டுகளுக்கு குத்தகைக்கு பெறவும், அதற்கான உரிமக் கட்டணம் ரூ.15,14,572/–ஐ செலுத்தவும், அதன் பின்னர் வரும் ஆண்டுகளுக்கு, நிலத்தின்

மதிப்பில் 7% ஒவ்வொரு ஆண்டிற்கும் கூடுதல் உரிமக் கட்டணம் செலுத்தவும் தீர்மானம் நிறைவேற்றி உள்ளதாகவும், எனவே மேற்படி குத்தகை தொகையை செலுத்தி, ரயில்வே நிர்வாகத்துக்கு சொந்தமான மேற்படி நிலத்தை திருச்சிராப்பள்ளி மாநகராட்சி பெற்றுக் கொள்ள உரிய அனுமதி வழங்குமாறு திருச்சிராப்பள்ளி மாநகராட்சி ஆணையர், அரசைக் கோரியுள்ளார். மேலும், குத்தகைத் தொகை தென்னக இரயில்வேயின் நிலமதிப்பு குறித்த வழிகாட்டுதலின்படி கணக்கிடப்பட்டுள்ளதாக இரயில்வே துறை தெரிவித்துள்ளதாகவும் மாநகராட்சி ஆணையர் குறிப்பிட்டுள்ளார்.

4. நகராட்சி நிர்வாக ஆணையர், மேலே இரண்டாவதாக படிக்கப்பட்ட தமது கடிதத்தில், திருச்சிராப்பள்ளி மாநகராட்சி ஆணையரின் மேற்படி செயற்குறிப்பினை அரசுக்கு பரிந்துரைத்துள்ளார்.

5. நகராட்சி நிர்வாக ஆணையரின் செயற்குறிப்பினை அரசு கவனமுடன் பரிசீலனை செய்தது. பரிசீலனைக்குப் பின்னர், நகராட்சி நிர்வாக ஆணையரின் பரிந்துரை அடிப்படையில் திருச்சிராப்பள்ளி மாநகராட்சி ஆணையரின் செயற்குறிப்பை ஏற்று திருச்சிராப்பள்ளி மாநகராட்சி, வார்டு எண் 29, ஆலத்தூர் கிராமம் சர்வே எண்கள் 206, 207 ஆகியவற்றில் உள்ள ரயில்வே துறைக்கு சொந்தமான 2031 ச.மீ (21,862 ச.அடி) நிலத்தினை, மேலஅம்பிகாபுரம் பகுதி பொது மக்களின் நலன் கருதி மக்களின் பயன்பாட்டிற்கென, 10 ஆண்டுகளுக்கு குத்தகைக்கு பெறவும், அதற்கான உரிமக் கட்டணமாக ரூ.15,14,572/-ஐ (ரூபாய் பதினைந்து இலட்சத்து பதினான்காயிரத்து ஐநூற்று எழுபத்திரண்டு மட்டும்), செலுத்தவும் அதன் பின்னர் வரும் ஆண்டுகளுக்கு, ஒவ்வொரு ஆண்டிற்கும் நிலத்தின் மதிப்பில் 7 சதவீதம் கூடுதல் உரிமக் கட்டணம் செலுத்தவும் நிர்வாக அனுமதி வழங்கி அரசு ஆணையிடுகிறது.

/ஆளுநரின் ஆணைப்படி /

க.அஷோக் வர்தன் ஷெட்டி
அரசு முதன்மைச் செயலாளர்.

பெறுநர்
நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை –5.
ஆணையாளர், திருச்சிராப்பள்ளி மாநகராட்சி,
திருச்சிராப்பள்ளி.
மாவட்ட ஆட்சித் தலைவர், திருச்சிராப்பள்ளி.

நகல்
தென்னக ரயில்வே கோட்ட மேலாளர், திருச்சிராப்பள்ளி.
மாண்புமிகு முதலமைச்சரின் செயலரின் தனிச்செயலர்,
சென்னை – 600 009.
மாண்புமிகு துணை முதலமைச்சரின் சிறப்பு நேர்முக உதவியாளர்,
சென்னை – 600 009.
வருவாய்த் துறை / நிதித் துறை, சென்னை – 600 009.
நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை முதன்மைச் செயலாளரின்
தனிச் செயலாளர், சென்னை – 600 009.
நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (அநு2)துறை,
சென்னை – 600 009.
இருப்புக் கோப்பு / உதிரி நகல்.

/ ஆணைப்படி அனுப்பப்படுகிறது /

பிரிவு அலுவலர்